திருநெல்வேலி மாநகராட்சி

பத்திரிக்கை செய்தி

நாள்: 18.12.2017

நிலுவை வரிவிதிப்புதாரர்களின் பெயர் பட்டியல் சம்பந்தப்பட்ட மண்டல அலுவலக பகுதிகளின் முக்கிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட உள்ளது.

திருநெல்வேலி மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, பாதாள சாக்கடை திட்ட சேவை கட்டணம் மற்றும் கடை வாடகை ஆகிய இனங்களுக்கு வரி வசூலிக்கும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய 2017-18-ம் ஆண்டு நடப்பு மற்றும் நிலுவை சொத்துவரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை திட்ட சேவைக் கட்டணம், குத்தகை இனங்கள் (கடை வாடகை) நிலுவை ஆகியவைகளை உடனடியாக திருநெல்வேலி மாநகராட்சி நான்கு மண்டல அலுவலங்களில் இயங்கி வரும் கணினி வரிவசூல் மையங்களில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு சில வரிவிதிப்புதாரர்கள் மாநகராட்சி அறிவிப்பினை கருத்தில் கொள்ளாமல் தொடர்ந்து பெருந்தொகை நிலுவையில் வைத்துள்ளனர். எனவே மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகையை நிலுவை வைத்துள்ள நபர்களுக்குரிய மாநகராட்சி குடிநீர் இணைப்பு துண்டிப்பு மற்றும் ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், மேலும் நிலுவை வரிவிதிப்புதாரர்களின் பெயர் பட்டியல் சம்பந்தப்பட்ட மண்டல அலுவலக பகுதிகளின் முக்கிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

18/xii/'17

ஆணையாளர்,
திருநெல்வேலி மாநகராட்சி